**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.**

**முன்னிலை :** செல்வி. சே.தா. ஆயிஷ் பேகம், பி.ஏ., பி.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, செய்யாறு.

2023 ஆண்டு ஜுலை மாதம் 10ம் நாள் திங்கள்கிழமை

இடைக்கால மனு எண்.353/2018-ன் அசல் வழக்கு எண்.275/2013

ஜெயராமன் ...மனுதாரா்/வாதி

/எதிர்/

1. பெருமாள்
2. கண்ணன்
3. காசி
4. மல்லிகா
5. ராஜேந்திரன் (இறந்துவிட்டார்)
6. காட்டுராஜ்
7. நாகராணி
8. அப்பு
9. பவானி
10. மைனர் பவித்ரா
11. மைனர் அபிலாஷ்
12. சோமசேகர்
13. ரமேஷ்
14. தியாகராஜன்
15. அமராவத்கி
16. ஜெயசீலன்
17. கண்ராயன்
18. மணிகண்டன்
19. ஐயப்பன் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு 06.07.2023ம் தேதியன்று என்முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.J. ராமகிருஷ்ணன், அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 9 வரையிலான எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மற்றும் 12 முதல் 14 வரையிலான எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கில் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்கள், 10 மற்றும் 11ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இளவராக இருந்து பின்னர் பெரும்பாண்மை வயது அடைந்த நபர்கள் என்று பிரகடனப்படுத்தப்பட்டு அவர்களுக்கு அழைப்பாணை மற்றும் அறிவிப்பு

அனுப்பப்பட்டு ஆஜராகாத நிலையில் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், 15 முதல் 19 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.S.சங்கரபாண்டியன், அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்டு மனுக்கள் ஆவணங்களைப் பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 22 விதி 4(4)-ன் படி காலம் சென்ற 5ம் பிரதிவாதி இந்நீதிமன்றத்தால் அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு ஆஜராகாததால் அவர் மீது ஒருதலைபட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி தாவா பாகப்பிரிவினைக்கான தாவா என்றும், எனவே காலம் சென்ற 5ம் பிரதிவாதியின் சட்டப்பூர்வ பிரதிநிதிகளை தாவாவில் சேர்க்காமல் விலக்கு அளிக்கக் கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும்.

**2) மனுவின் சுருக்கம்.**

மனுதாரர் மேற்படி அசல் வழக்கில் வாதி என்றும், மேற்படி தாவாவில் 5ம் பிரதிவாதி ராஜேந்திரன் 21.12.2017ல் காலமாகிவிட்டதாகவும், அவர் கனம் நீதிமன்றத்தில் அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும் ஆஜராகாததால் அவர் மீது ஒருதலைபட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும், அவரது சொந்த சகோதரர், சகோதரிகளான 4,6,7 பிரதிவாதிகளும் நீதிமன்றத்தில் ஆஜராகாததால் அவர்கள் மீதும் நீதிமன்றத்தில் ஒருதலைப்பட்ச உத்தரவு செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி தாவாவில் 5ம் பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்வியாஜ்ஜியம் செய்யாததாலும், இந்த தாவா பாகப்பிரிவினைக்கான தாவா என்பதாலும், காலம் சென்ற 5ம் பிரதிவாதியின் சட்டபூர்வ பிரதிநிதிகளை தாவாவில் சேர்க்காமல் விலக்கு அளித்து தாவாவை தொடர்ந்து நடத்த அனுமதி அளித்து உத்தரவு செய்ய கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. 15 எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 16 முதல் 19 வரையிலான எதிர்மனுதாரர்களால் ஏற்கப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:-**

(i). மனு சங்கதிகள் அனைத்தும் பொய், மோசவிதமானவை, சட்டப்படி செல்லத்தக்கதல்ல. மனுதாரர் இந்த மனுவினை 5ம் பிரதிவாதி இறந்துவிட்டார் என்றும், 5ம் பிரதிவாதி உயிருடன்

இருக்கும்பொழுதே எதிர்வியாஜ்ஜியம் செய்யவில்லை என்றும், மேலும் வழக்கு பாகப்பிரிவினைக்கான தாவா என்பதால் 5ம் பிரதிவாதியின் சட்டப்பூர்வமான வாரிசுகளை இந்த வழக்கில் உரிய பார்ட்டியாக சேர்க்க வேண்டிய அவசியமில்லை என்றும், பாகப்பிரிவினை தாவாவில் பாகஸ்தர்கள் அனைவரும் உரிய பார்ட்டியாக சேர்க்கப்பட வேண்டும் என்றும், அவ்வாறு உரிய பார்ட்டியாக பாகஸ்தர்கள் சேர்க்கப்படாத பட்சத்தில் அந்த தாவா ஒரு முழுமையான தாவா அல்ல என்றும், அதன் அடிப்படையிலேயே அந்த தாவாவை தள்ளுபடி செய்யலாம் என்றும், 5ம் பிரதிவாதி இறந்துவிட்டதால் அவர் உயிருடன் இருக்கும் பொழுது இந்த தாவாவில் எதிர்வியாஜ்ஜியம் செய்யவில்லை என்பதால் அவருடைய வாரிசுகளும் எதிர் வியாஜ்ஜியம் செய்ய முடியாது என்று கூறமுடியாது.

(ii). மேலும் ஏற்கனவே இறந்துபோன பிரதிவாதி தன் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்து அவர் இறந்தபிறகு அவருடைய வாரிசுகள் அவருடைய எதிர்வழக்குரைக்கு மாறாக மாறுபட்ட எதிர் வழக்குரையைத்தான் தாக்கல் செய்யக்கூடாது என்றும் அவருடைய வாரிசுகள் உரிய பார்ட்டிகளாக சேர்க்க வேண்டிய அவசியமே இல்லையென்று கூறவில்லை, ஆனால் காலம் சென்ற 5ம் பிரதிவாதி ராஜேந்திரனின் சட்டப்படியான வாரிசுகளை இந்த வழக்கில் உரிய தரப்பினராக சேர்க்கப்பட்டால் மட்டுமே உரிய பரிகாரம் கிடைக்கும் என்றும், இவ்வெதிர்மனுதாரரின் மனு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. மனுதாரரின் மனு, எதிர்மனுதாரர்களின் எதிருரை, இருதரப்பு வாதம் மற்றும் வழக்காவணங்கள் ஆகியவற்றைப் பரிசீலனை செய்ததில் இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்?

5. கற்றறிந்த மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் இவ்வழக்கில் 5ம் பிரதிவாதி இறந்துவிட்டதாகவும், அவர் உயிரோடு இருந்த காலத்தில் வழக்கு சம்மன் சார்வு செய்யப்பட்ட நிலையில் நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர் வழக்குரை தாக்கல் செய்யாததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டுவிட்டார் என்றும், பின்னர் வழக்கு நிலுவையில் இருந்தபோது 5ம் பிரதிவாதி இறந்துவிட்டதாகவும், உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கட்டளை 22 விதி 4(4)ன் கீழ் நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர் வழக்குரை தாக்கல் செய்யாத வழக்குத் தரப்பினரின் வாரிசுகளை வழக்கில் சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை என்றும்,

மேலும் இறந்த 5ம் பிரதிவாதி மற்றும் அவரது சகோதர சகோதரரிகளான 4,6,7 பிரதிவாதிகள் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டு இந்நீதிமன்றத்தில் ஆஜராகாததால் தோன்றாத் தரப்பினர்களாக்கப்பட்டுள்ளார்கள் என்றும், 4,5,6,7 பிரதிவாதிகள் சிங்காரம் குமாரர் ராகவனுக்கு படவேட்டான் என்பவரின் வாரிசுகள் என்றும், அவர்களுக்கும் சேர்த்துதான் 1/7 பாகத்தை வாதிக்கு வழங்கக் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும் 5ம் பிரதிவாதியின் வாரிசுகளை சேர்த்து வழக்கை மேல் நடத்தினால் தேவையற்ற காலவிரையம் ஏற்படும் என்றும், எனவே அவரது வாரிசுகளை சேர்க்க மனு தாக்கல் செய்ய வாதி/மனுதாரருக்கு விலக்கு அளித்து வழக்கை மேல் நடத்த உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே இம்மனுவினை அனுமதிக்குமாறும் வாதிட்டார்.

6. கற்றறிந்த எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் இவ்வழக்கு பாகப்பிரிவினை வழக்கு என்றும், பாகப்பிரிவினை வழக்கில் பாகஸ்தர்கள் அனைவரும் வழக்குத் தரப்பினர்களாக சேர்க்கப்பட வேண்டும் என்றும், அவர்களை சேர்த்து இவ்வழக்கை நடத்தினால் தான் இந்த தாவா ஒரு முழுமையான தாவாவாகும் என்றும், எனவே இந்த மனுவினை எதிர்மனுதாரர்களின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமாய் வாதிட்டார்.

7. இருதரப்பு மனுக்கள் ஆவணங்களைப் பரிசீலனை செய்ததில், மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், 5ம் எதிர்மனுதாரர் சம்மன் சார்வு செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர் வழக்குரை தாக்கல் செய்யாததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டு பின்னர் இறந்துவிட்டதால், அவரது வாரிசுகளை இவ்வழக்கில் தரப்பினராக சேர்ப்பதிலிருந்து வாதி/மனுதாரருக்கு விலக்களிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும் பாகப்பிரிவினை வழக்கில் அனைவரும் தரப்பினர்களாக வேண்டியது அவசியம் என்றும், எனவே இம்மனுவினை தள்ளுபடி செய்யுமாறு ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது.

8. மேற்படி இவ்வழக்கு கோப்பினை ஆராய்கையில், 5ம் பிரதிவாதி இவ்வழக்கில் சம்மன் சார்வு செய்யப்பட்டும் நீதிமன்றத்தில் முன்னிலையாகாததாலும் எதிர் வழக்குரை தாக்கல் செய்யாததாலும் இந்நீதிமன்றத்தால் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டுள்ளார். தற்போது 5ம் பிரதிவாதி இறந்துவிட்ட

காரணத்தால் அவரது வாரிசுகளை சேர்க்க விலக்கு அளிக்கக் கோரியும் வழக்கை வாதி மேல் நடத்த அனுமதி அளிக்கவும், இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர்கள் தரப்பில் இவ்வழக்கு பாகப்பிரிவினை வழக்கு ஆதலால் வழக்கு தரப்பினர்கள் அனைவரும் அவசியமாக சேர்க்கப்பட வேண்டும் என்று வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது. உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 22 விதி 4(4)ன் படி பிரதிவாதியானவர் வழக்கு தாக்கல் செய்த பின்பு மற்றும் நீதிமன்றம் தீர்ப்புரை வழங்குவதற்கு முன்பு இறந்திருந்தால் இந்த விதியானது பொருந்தும். உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை 22 விதி 4(4)ல் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

> ஒரு நீதிமன்றம் எப்போதெல்லாம் தகுந்தது என்று நினைக்கிறதோ அப்போது வாதியானவருக்கு நீதிமன்றத்திற்கு ஆஜராகாமல் எதிர் வழக்குரை தாக்கல் செய்யாமல் இருந்த பிரதிவாதிகளையோ அல்லது எதிர் வழக்குரை தாக்கல் செய்துவிட்டு வழக்கு நடத்த ஆஜராகாமல் ஒருதலைபட்சமாக்கப்பட்ட பிரதிவாதி இறந்தபிறகு அவரது வாரிசுகளை வழக்கில் தரப்பினராக சேர்ப்பதிலிருந்து விலக்கு அளிக்கலாம். மேலும் அம்மாதிரியான சூழ்நிலைகளில் தீர்ப்புரையை இறந்த பிரதிவாதிகளுக்கு எதிராகவும் வழங்கலாம். அந்த தீர்ப்பானது இறந்த பிரதிவாதி உயிருடன் இருந்த காலத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பாக கொள்ளப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

9. மேற்படி கட்டளை 22 விதி 4(4)ன் கீழ் பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர் வழக்குரை தாக்கல் செய்து தோன்றாத்தரப்பினராக்கப்பட்டிருந்தாலும் அல்லது அழைப்பாணை சார்வு செய்யப்பட்ட பின்பு நீதிமன்றத்தில் ஆஜராகாமல் ஒருதலைபட்சமாக்கப்பட்டிருந்தாலும் மேற்படி கட்டளை பொருந்தும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் இவ்வழக்கு பாகப்பிரிவினை வழக்கு என்பதால் மேற்படி விதி பொருந்தாது என்றும், எனவே இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும், மேலும் எதிர் வழக்குரை தாக்கல் செய்யாத எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதியின் வாரிசுகள் வழக்கைநடத்த அனுமதியளிப்பது அவசியம் என்றும், அப்போதுதான் வழக்கில் முழு தீர்வு காண இயலும் என்று வாதிடப்பட்டுள்ளது.

10. மேலும் **மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் முன்தீர்ப்பு வழக்கான கிருஷ்ணவேனி மற்றும் நால்வர் / எதிர் / ராமச்சந்திர நாயுடு மற்றும் பலர்** என்ற பாகப்பிரிவினை வழக்கிலும் மேற்படி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 22 விதி 4(4)பொருந்தும் என்று மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தால் முன்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வழக்கில் 5ம் பிரதிவாதிக்கும், வழக்கு சொத்தில் சமபாகம் உள்ளதாக வாதி கூறி தனக்கான 1/7 பாகத்தை பாகப்பிரிவினை செய்து கொடுக்க வேண்டி தாக்கல் செய்துள்ளார். 5ம் பிரதிவாதியின் வாரிசுகளை இவ்வழக்கில் சேர்க்காததால் எந்தவித பாதிப்பும் ஏற்பட வாய்ப்பில்லை. மேலும் 5ம் பிரதிவாதி உயிரோடு இருந்த காலத்திலேயே இவ்வழக்கை நடத்த முன்வரவில்லை. எனவே அவரது வாரிசுகளை சேர்த்து வழக்கை மேல் நடத்த தேவையற்ற காலவிரையம் ஏற்படும் என்று வாதி தரப்பில் கூறுவது ஏற்கும் நிலையில் உள்ளது. **மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் வெள்ளப்பன் /எதிர்/ பரப்பன்** என்ற முன்தீர்ப்பு வழக்கில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 22 விதி 4(4)ன் கீழான விதி வழக்கு மற்றும் மேல்முறையீட்டிற்கும் பொருந்தும் என்றும், விலக்கு அளிக்கும் அதிகாரம் நீதிமன்றத்திற்கு தீர்ப்புரை வழங்குவதற்கு முன்பு எக்காலத்திலும் வழக்கற்ற நிலை தன்மை ஏற்பட்டாலுமே உண்டு என்று கூறப்பட்டுள்ளது.

11. மேற்படி கட்டளை 22 விதி 4(4)ன் கீழ் இறந்த பிரதிவாதியின் வாரிசுகளை வழக்கில் சேர்ப்பதிலிருந்து விலக்கு அளிக்கலாம் என்று கூறப்பட்டுள்ளதாலும், மேற்படி சுட்டிக்காட்டப்பட்டுள்ள முன் தீர்ப்பு வழக்கு அசல் வழக்கு மற்றும் மேல்முறையீட்டு வழக்கிற்கும், பாகப்பிரிவினை வழக்கிற்கும் கட்டளை 22 விதி 4(4) பொருந்தும் என முன்தீர்ப்பு வழங்கியுள்ளதாலும், இந்நீதியின் நலன்பால் வழக்கில் ஏற்படும் காலவிரையத்தை கருத்தில் கொண்டு இம்மனு அனுமதிக்க உகந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேலும் இம்மனுவின் தன்மை மற்றும் வழக்கு தரப்பினர்களின் உறவு முறையைக் கருத்தில் கொண்டு மனுவின் செலவுத் தொகையை அவரவர்களே ஏற்க வேண்டும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**இறுதியாக,** இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை ஏதுமில்லை.

இந்த உத்தரவு எம்சொல்லிற்கிணங்க சுருக்கெழுத்து தட்டச்சரால் நேரிடையாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்த பின்னர் 2023-ம் ஆண்டு ஜூலை திங்கள் 10-ம் நாளான இன்று இந்நீதிமன்ற அவையறிய பகரப்பட்டது.

(ஒம்). சே.தா. ஆயிஷ் பேகம்,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்.</u>

இல்லை

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>

இல்லை

(ஒம்). சே.தா. ஆயிஷ் பேகம்,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு.